வருமானத்தின் அடிப்படையில் சலுகைகள் தரப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தகுதியின் அடிப்படையில் வருவதற்கு தியாகிகளின் குழந்தைகளுக்கு வாய்ப்பு இருந்தால், அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா? நாட்டின் உரிமைக்காக போராடியவர்களுக்கு இந்த உதவியைக்கூட செய்யக்கூடாதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சேர்க்கப்பட்ட அளவில் பார்த்தால் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதைப்பற்றிய கணக்கு என்னிடத்தில் இல்லை. அவர்களெல்லாம் புறக்கணிக்கப்படவில்லை, மேல் வகுப்புக்காரர்கள் மட்டும் சேர்க்கப்படுகிறார்கள் என்ற நிலையில்லை. புள்ளி விவரம் தேவையென்றால், தனிக்கேள்வி போட்டால் தரலாம்.

### துவக்கக் கல்வித் திட்டம்

*432 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-ம் கல்வி ஆண்டு முதல் நடப்புக் கல்வி ஆண்டு வரையில் துவக்கக் கல்வித் திட்டத்தில் புதிய மாற்றங்கள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1965-ம் ஆண்டில் அரசினரால் ஏற்கப்பட்ட புதிய பாடத்திட்ட முறைகள் 1967-68-ம் ஆண்டு முதல் ஏழாம் வகுப்பிலும், 1968-69-ம் ஆண்டு முதல் எட்டாம் வகுப்பிலும் அமுல் செய்யப்பட்டுள்ளன. தற்கால விஞ்ஞான வளர்ச்சி, அணுகு முறை, புதிய கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சி, சமூக சூழ்நிலை, நவீன வாழ்க்கை முறைகள் இவைகளுக்கேற்பப் பள்ளிக் கல்வியின் பாடத்திட்டங்களை மாற்றி அமைக்கக் கருதி, இதற்கென வல்லுநர் குழுக்களை ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்கள் தங்களது புதிய பாடத்திட்டங்களின் நகல்களை தயாரித்துள்ளன. மேலும் ஆதாரக் கல்வித் திட்டத்தை, ஆதாரக் கல்வி அல்லாத பாடத் திட்டத்துடன் ஒருங்கு இணைத்தல் பற்றியும் ஒரு துணைக்கமிட்டி ஆய்வு செய்து அதுபற்றிய பாடத்திட்ட வரைவு ஒன்றினை சமர்ப்பித்துள்ளது.

*1972 மார்ச் 11]*

இது பரிசீலனையில் உள்ளது. இம் முயற்சிகளின் விளைவாக தொடக்கக்கல்வி மேலும் செம்மைப்படுத்தப்பட்டு தர உயர்வு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, முதல் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு பரீட்சை வைத்து அந்த பிஞ்சு உள்ளங்களின் மனதில் வேதனையை உண்டுபண்ணுவதை விட, 5 ஆண்டுகள் படித்த பிறகு, 5-வது வகுப்பில் பரீட்சை வைத்தால் நலமாக இருக்கும், இதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது இருக்கும் இந்தக் கருத்தை கல்வி வல்லுநர்கள்தான் ஆராய வேண்டும். குழந்தைகள் மனப்பக்குவம், மனத்திட்பம் அறிந்து கல்வி வல்லுநர்கள் என்ன கருத்து அறிவிக்கிறார்களோ அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் அதைச் செய்ய இருக்கிறது. அதற்காக திட்டக்குழுவில் இப்போது டாஸ்க் போர்ஸ் என்று பணிக்குழு அமைக்கப்பட்டு, அதிலே கல்வி வல்லுநர்கள் அடங்கிய குழு இதை ஆராய்ந்து வருகிறார்கள். அந்த வல்லுநர்களின் கருத்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப் பட்ட பிறகு, அந்தக் கருத்தை ஏற்று நடத்த அரசு முன்வரும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, மாணவர்களுடைய நோக்கம் எந்தத் துறையில் செல்கிறது என்று அறிந்து அந்தத் துறையில் பாடத்தை நடத்துகிற முறை ரஷ்ய நாட்டில் பின்பற்றப்பட்டு வருவதால் நல்ல பயன் பெற்று இருக்கிறார்கள். அதை மனதில் கொண்டு, நம்முடைய மாநிலத்திலும் அப்படிப்பட்ட பாடத்திட்டத்தை கொண்டு வரும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அடிப் படையிலே தான் மாணவர்களின் ஞாபகத்தை சோதிக்கும் அடிப்படையில் மட்டும் தேர்வு நடத்தாமல், அவர்கள் திறன், அறிவு ஆற்றல் இவற்றையும் வைத்து அவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கமளிக்கின்ற வகையில் பாடங்களைக் கற்றுத் தருவதற் கான வகையில் அந்தப் பணிக்குழு ஆராய்ந்து வருகிறது. அதிலே பல்வேறு தரப்பட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தில் இது பற்றி கல்வித்துறையில் ஆலோசனை தருகிற

ஒரு அதிகாரியும் கூட அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பிறகு அந்தத் துறையில் நல்ல மேம்பாடு இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**திரு. எ. சுவாமிதாஸ்** : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஒரு தனி இயக்குநரைப் போட்டு, செயல்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இப்போது துவக்கப் பள்ளிகளுக்கும், ஆரம்பப் பள்ளிகளுக்கும் சேர்ந்து ஒரு இயக்குநர் இருந்தாலும், துவக்கப் பள்ளிகளை கவனிக்கக்கூடிய வகையில் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் இருக்கிறார்கள். அதற்காக தனியாக கவனிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலேயே ஆரம்பப் பள்ளிகளும் இருக்கிற காரணத்தால், அதற்கென்று தனியாக இயக்குநர் தேவையில்லை.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவரவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பிய நேரத்தில், வெளிநாடுகளில் இருக்கின்ற கல்வித் திட்டங்களைப்போல், அதிலுள்ள சிறப்பான அம்சங்களை நம்முடைய நாட்டிலே புகுத்த வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மாற்றங்களைச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, வெளிநாடுகளில் பல்வேறு வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு, பல வருஷங்களாக, 100 வருஷ திட்டம், 50 வருஷ திட்டம், 200 வருஷ திட்டம் என்ற அடிப்படையில் வளர்க்கப்பட்டு, அந்தந்த தேச சூழ்நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டவையாகும். அவை எல்லாவற்றையும் இங்கே நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது முடியாது என்றாலும், அந்த அடிப்படையில் நம்முடைய நாட்டிற்கு உகந்த வகையில் அவைகளைப் பயன்படுத்துகிற வகையில் செய்யலாம். அவற்றையெல்லாம் நிபுணர் குழு ஆராய்ந்து வருகிறது. அவர்களின் ஆராய்ச்சி முடிந்தபிறகு, அவர்கள் கருத்து அரசுக்குக் கிடைத்ததற்குப் பிறகு, அவற்றை எப்படி மாற்றுவது என்பதைப் பற்றியும், அதற்கான முயற்சியையும் அரசு எடுக்க முன்வரும்.